

Ravindra Gallage/ICRC

## மனிதநேயக் கொள்கைகளுக்கான மதிப்பை ஊக்குவித்தல்

கடந்த பல வருடங்களாக, கீழ்வருமாறு ஐசிஆர்சி சர்வதேச மனிதநேய சட்டத்தை (சமச) ஊக்குவித்துள்ளது.

- சமச கொள்கைகளை பயிற்சிகள், பாடத்திட்டங்களில் உள்வாங்க அதிகாரிகள், இலங்கை படையினர் மற்றும் கல்விமான்களுக்கு ஆதரவளித்தல்.
- சமச தொடர்பான வெளிநாட்டு கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்று அது பற்றிய விளக்கத்தை விருத்தி செய்வதற்காக அனுசரனை வழங்குதல்.
- சமச அறிவு விருத்திக்காக சட்டத்துறையில் பட்டப்படிப்பு மாணவர்கள் மத்தியில் வருடாந்த வழக்காடு மன்ற போட்டிகளை நடத்துதல்.
- ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் பணிகளின் இலங்கையின் பங்களிப்புகளுக்கு உதவும் பொருட்டு அப் பணிகளுக்காக அனுப்பப்படும் படையினருக்கு சமச தொடர்பில் விளக்கமளித்தல்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் சேர்ந்து பணியாற்றுதல்

ஐசிஆர்சியானது அதன் தேசிய செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்க பங்காளியான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் பொருள்சார் உதவிகளை வழங்கி வருகின்றது. கடந்தகால மோதல்கள் அல்லது இயற்கை அனர்த்தம் காரணமாக தமது குடும்ப உறுப்பினர்களை பிரிந்துள்ளவர்களின் குடும்பத் தொடர்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கும், அடிப்படை மனிதநேய கொள்கைகள் மற்றும் விழுமியங்களை பரப்பி ஊக்குவிப்பதற்காகவும், முதலுதவி, தேடுதல், மீட்பு, துரித மதிப்பீடு போன்ற பணிகளில் தமது தொண்டர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்காகவும் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்து வருடங்களாக, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள அதன் கிளைகளை மீள உருவாக்குவதற்காகவும் ஐசிஆர்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உதவி வருகின்றது.

## செயல் நோக்கு

செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐசிஆர்சி), பக்கசார்பற்ற, நடுநிலையான, சுதந்திரமாக செயற்படும் ஒரு மனிதாபிமான அமைப்பாகும்.. ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச் சூழ்நிலைகளின் போது பாதிக்கப்படுவோரின் வாழ்வையும் அவர்களின் கௌரவத்தையும் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைக்கு உதவிகள் வழங்குவதையும் தனது பிரத்தியேக செயல் நோக்காகக் கொண்டுள்ளது.

மனிதாபிமான சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானக் கொள்கைகளை ஊக்கவிப்பதன் மூலமும் அவற்றை வலுப்படுத்துவதன் மூலமும் மனித அவலங்கள் ஏற்படுவதை தடுக்கும் முயற்சியிலும் ஐசிஆர்சி ஈடுபடுகிறது.

1863 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐசிஆர்சி, ஜெனீவா சமவாயங்களும், செஞ்சிலுவை, செம்பிறைகளின் சர்வதேச இயக்கமும் உருவாக வழியமைத்தது. இது ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச் சூழ்நிலைகளின் போதான இயக்கத்தின் சர்வதேச பணிகளை வழிப்படுத்தி அதனை ஒருங்கமைக்கின்றது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 05
இலங்கை.
தொலைபேசி: +94 (11) 250 33 46
தொ.ந: +94 (11) 250 33 48
மின்னஞ்சல்: colombo@icrc.org www.icrc.org

70, வைரவர் கோவில் வீதி,
வைரவர் புளியங்குளம்,
வவுனியா,
இலங்கை
தொலைபேசி: +94 (0)24 222 28 55
தொ.ந: +94 (0)24 222 25 37

ICRC

2015.0117/250 10.2015 1000


Tuan Zaharan/ICRC

# இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழு

ICRC

IN BRIEF



## எமது நடவடிக்கை

செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐசிஆர்சி) 1989ம் ஆண்டு முதல் இலங்கையில் இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சியைத் தொடர்ந்தும், அதன் பின்னர் நாட்டின் வடக்குக் கிழக்கில் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களால் ஏற்பட்ட மனிதநேயத் தேவைகளில் உதவுகின்றது.

இன்று, கடந்த கால மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் எஞ்சியுள்ள மனிதநேயத் தேவைகளை நிறைவேற்றும் விடயத்தில் ஐசிஆர்சி கவனம் செலுத்துகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து நலிவுற்ற குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கும் வாழ்வாதார உதவிகளையும், நீர் மற்றும் தேகாரோக்கிய வசதிகளையும் வழங்குகின்றது. காணாமல் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்ற விடயங்களை தெளிவுபடுத்துவது உள்ளிட்ட காணாமல் போனவர்களின் குடும்பங்களது பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் துணைபுரிந்து வருகின்றது.

மேலும், ஐசிஆர்சி நாட்டிலுள்ள அனைத்து கைதிகளினதும் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் உதவியளித்து வருகின்றது. தற்போதுள்ள சிறைச்சாலை முகாமைத்துவ முறையை விருத்தி செய்வதற்கு உதவும் அதேவேளை, உயிரிழந்தவர்களின் கௌரவத்தை பாதுகாப்பதற்காக நீதிமன்ற மருத்துவ நிலையங்கள் மற்றும் அதிகாரிகளின் தொழில்நுட்ப தடயவியல் திறன்களின் விருத்திக்கும் உதவுகின்றது.

கல்விமான்கள், அதிகாரிகள், சிவில் சமூகம், மற்றும் படையினர் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டத்தை ஐசிஆர்சி ஊக்குவித்து வருகின்றது. மேலும், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இலங்கைப் பொலிஸின் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான பணியகம் என்பவற்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாக, வலுப்பிரயோகம், ஆயத பாவனை, தேடுதல் மற்றும் கைது நடைமுறைகளில் சர்வதேச தராதரங்களைப் பேணுதல் தொடர்பில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. மனிதநேய விழுமியங்களை ஊக்குவிக்கவும் மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் வாழ்வாதார உதவி முன்னெடுப்புக்களுக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு ஆதரவளித்து அதனுடன் கூட்டிணைந்து செயற்பட்டுகின்றது.



Frederic Dufour/ICRC



Tuan Zaharan/ICRC




Joanna Atkinson/ICRC



Tuan Zaharan/ICRC



Tuan Zaharan/ICRC

## தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் சேமநலனை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரிகளுக்கு ஆதரவளித்தல்

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் போதியளவு வசதிகளுடன் முறையாக நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தி அவர்களை குடும்பத்தவர்களுடன் தொடர்புகொள்ள வாய்ப்பளிக்கும் முயற்சிகளின்போது சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆதரவு வழங்கும் தமது உலகரீதியிலான மனிதநேய ஆணையின் அடிப்படையில், ஐசிஆர்சி 1989ம் ஆண்டு முதல் இலங்கையில் உள்ள தடுப்பு நிலையங்களுக்கு சென்று பார்வையிட்டு வருகின்றது. தமது விஜயத்தைத் தொடர்ந்து ஐசிஆர்சி தமது முடிவுகளையும், பரிந்துரைகளையும் இருதரப்பு மற்றும் நம்பகத்தன்மையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்கின்றது. தற்போது இலங்கையில் ஐசிஆர்சி,

- தடுப்பு நிலையங்களின் பொதுவான பௌதீக நிலைமைகளையும், கைதிகள் நடத்தப்படும் விதத்தையும் மதிப்பீடு செய்யும் அதேவேளை, கண்காணித்தும் வருகின்றது.
- இடநெருக்கடியை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றது.
- கைதிகளுக்கு போதியளவில் சுகாதார நலன் சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்காக அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது.
- கைதிகள் தமது குடும்பத்தவர்களுடன் தொடர்பை வைத்துக் கொள்ள உதவி வருகின்றது.
- சிறிய அளவிலான உட்கட்டமைப்பு புனரமைப்பு அல்லது மீள் புதுப்பித்தலுக்கு துணைபுரிந்து வருகின்றது (உதாரணமாக, சமயலறைகள், கூரை மற்றும் கழிவறைகளுடன் சிறைச்சாலை விடுதிகள், சூரிய சக்தியிலான மின்கலன்களை பொருத்துதல், நீர்த்தாங்கிகளை அமைத்தல், காற்றோட்ட முறைகளை விருத்தி செய்தல்).
- பிரதான ஆரோக்கிய பொருட்கள், ஆடை, மெத்தைகள் மற்றும் பொழுதுபோக்குப் பொருட்களையும் பகிர்ந்தளித்து வருகின்றது.

## காணாமல் போனவர்களின் குடும்பங்களது மனிதநேயத் தேவைகளை நிறைவேற்ற உதவுதல்

1990ம் ஆண்டு முதல் இலங்கையில் மோதல்கள் காரணமாக தமது விருப்பத்துக்குரியவர்களை தொலைத்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஐசிஆர்சி தொடர்பு கொண்டுள்ளது.

தமது மனிதநேய ஆணையின் கீழ், தமது உலகலாவிய அனுபவத்தின் அடிப்படையில் ஐசிஆர்சி இவ்வாறான குடும்பங்களின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான விரிவான பதில் நடவடிக்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வந்துள்ளது. மோதல்கள் நிறைவுபெற்று நீண்டகாலமாகியுள்ள போதிலும், இவர்களின் இந்த தேவைகள் இன்னமும் இருந்து வருகின்றன என்பதை ஐசிஆர்சி அறிந்து வைத்துள்ளது.

இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களது விசேட தேவைகளை இனங்கண்டு நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில், 2014ம் ஆண்டு கார்த்திகை மாதத்திற்கும் 2015ம் ஆண்டு ஆடி மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாடளாவிய ரீதியிலான மதிப்பீட்டைத் தொடர்ந்து, ஐசிஆர்சி இந்த மதிப்பீடு சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பான தமது முடிவுகளையும், பரிந்துரைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளது.

மேலும் நாட்டின் வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல்போனவர்களின் குடும்பங்களின் உளவியல், சமூக, பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாக தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையும் ஐசிஆர்சி வகுத்துள்ளது. உள்ளூர் அதிகாரிகளுடனும், நிறுவனங்களுடனும் சேர்ந்து இந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும்.

## உயிரிழந்தவர்களது கௌரவத்தை மேம்படுத்தல்

இயற்கை அல்லது மனித நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட மோதல்கள், இயற்கை அனர்த்தங்கள், அல்லது புலம்பெயர்வின் போது உயிரிழந்தவர்களின் உடலங்கள் கௌரவத்துடன் கையாளப்பட்டு தொழில்வாண்மை அடிப்படையில் நிர்வகிக்கப்படுதை உறுதிப்படுத்தும் வகையில் ஐசிஆர்சி தொழிற்பட்டு வருகின்றது. அதேபோல், உயிருடன் இருப்பவர்கள் சம்பந்தமாக சட்டவைத்திய விடயங்கள் தொடர்பிலும் உள்ளூர் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றது.

இலங்கையில் சட்டவைத்திய அதிகாரிகளின் தொழில்நுட்ப தடயவியல் திறன்களை விருத்தி செய்வதற்காக குறிப்பாக, மனித சடலங்களை கண்டுபிடித்தல், பகுப்பாய்வு செய்தல், அடையாளம் காணுதல் போன்ற விடயங்களில் ஐசிஆர்சி அவர்களுக்கு உதவி வருகின்றது. கீழ்வரும் கொள்கை மட்டத்திலான விடயங்களை உருவாக்குவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்காகவும் சட்டவைத்திய அதிகாரிகளுக்கும், ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கும் ஐசிஆர்சி உதவி வருகின்றது.

- அனர்த்தங்களின் பின்னர் உயிரிழந்தவர்களை நிர்வகிப்பது தொடர்பான வழிகாட்டல்களை வகுத்து உறுதிப்படுத்தும் செயன்முறைக்கும், புதைகுழிகளை நிர்வகிப்பது தொடர்பான நிர்வாக தரத்திலான தொழிற்பாட்டு செயன்முறைகளுக்கும் உதவியளித்தல்.
- உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணைகளை மேற்கொள்வது சம்பந்தமான சட்டங்கள், வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை திருத்தியமைக்கும் செயற்பாட்டிற்கு ஆதரவளித்தல்.
- தடுப்பு நிலையங்களில் சட்டவைத்திய விடயங்களை நிறைவேற்ற உதவுதல்.

## நலிவுற்ற குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குமான வாழ்வாதார உதவி

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் ஐசிஆர்சி நுண் பொருளாதார முன்னெடுப்புத் திட்டத்தின் ஊடாக கடந்த மோதல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள், அங்கவீனமுற்றவர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள், நலிவுற்ற குடும்பங்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் வாழ்வாதார முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக உதவி வருகின்றது. பயிர்ச் செய்கை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, வியாபாரம், கைப்பணி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் இந்தப் பயனாளிகளால் தமக்கும் தம்முடைய குடும்பத்திற்கும் ஒரு நிரந்தர வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. துறைசார் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மேற்கொள்ளப்படும் சமூகம்சார்ந்த வாழ்வாதார உதவித் திட்டத்தின் ஊடாக வடக்கில் மீள்குடியேறியவர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கும் ஐசிஆர்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## பாதுகாப்பான குடிநீர் மற்றும் தேகாரோக்கிய வசதியின் அடைவை விருத்தி செய்தல்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள் திறந்த கிணறுகள் புனரமைக்கப்பட்டு, நிர்மானிக்கப்பட்டதாலும், கைப் பம்பிகள் திருத்தியமைக்கப்பட்டதாலும் பயனடைந்து வருகின்றனர். அதேவேளை, தமது பாடசாலைகளில் உள்ள நீர் மற்றும் கழிவறை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதால் மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர்.